5. தகவல் கோரல்

(அ) முன் அனுமதியின்றி பிரச்சினை எழுப்புதல்

. முற்பகல் 11–30

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒன்றுமே கொடுக்கவில்லையே நீங்கள். என்னிடம் ஏதாவது கொடுத்துவிட்டுக் கேளுங்கள்.

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னிடம் அறிவிப்பு கொடுத்துவிட்டுத்தான் நீங்கள் எழுந்திருக்க வேண்டும். சில முறைகள் வைத்திருக்கிறோம். என்னிடம் அறிவிப்பு கொடுத்துவிட்டுக் கேளுங்கள். (குறுக்கீடு) இதெல்லாம் முறையில்லை. என்னிடம் அறிவிப்புக் கொடுக்காமல் பேசுகிற எதுவும் அவைக் குறிப்பில் இருக்காது. உட்காருங்கள். இதெல்லாம் முறையல்ல. என்னிடம் ஏதாவது அறிவிப்புக் கொடுக்காமல் பேசுகிற எதுவும் அவைக்குறிப்பில் இருக்காது. உட்காருங்கள். (குறுக்கீடு) என்னிடம் ஏதாவது அறிவிப்புக் கொடுத்தால் தானே எழுப்பலாம். (குறுக்கீடு) திடீரென்று எழுப்ப முடியாது. இது சந்தைக் கடையல்ல. உட்காருங்கள். எதற்கு அறிவிப்பு கொடுக்க வேண்டுமென்று வைத்திருக்கிறோம்? (குறுக்கீடு) அரசாங்கம் சம்பந்தப்பட்டதற்கு எழுதிக் கொடுத்து பதில் பெறுவதற்காகத்தான் என்னிடம் அறிவிப்புக் கொடுக்க வேண்டுமென்று வைத்திருக்கிறோம்.

திரு. தாமரைக்கனி, உட்காருங்கள். (குறுக்கீடு) அதற்கு நான் அனுமதி மறுத்திருக்கிறேன். அனுமதி மறுத்ததை எழுப்ப முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடு)

(ஆ) போலி இராஜினாமா கடிதம் மீதான நடவடிக்கை குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாமரைக்கனி, நீங்கள் எழுதியதாக எனக்கு வந்த ஒரு கடிதத்தைப் பற்றி உங்களிடம் நான் சில குறிப்புகள் கேட்டிருக்கிறேன். எனக்கு உங்கள் பெயரால் ஒரு கடிதம் வந்தது. நான் மற்ற மற்ற பேரவைத் தலைவர்களைப் போல அவசரப்பட்டு, ஆத்திரப்பட்டு ஒரு முடிவு எடுக்கிறவன் இல்லையென்கிற காரணத்தாலேதான், முறைப்படி, விதிப்படி உங்களை அழைத்து, இந்தக் கடிதம் வந்திருக்கிறதே, நீங்கள் எழுதியதா எனறு கேட்டேன். நீங்கள்

அதற்கு அப்படி நான் எழுதவே இல்லை என்று சொன்னதற்கு பிறகு, உங்களுடைய கையெழுத்தையும், அதையும் சரிபார்க்கிறபோது முழுக்க முழுக்க மாறுபாடாக இருந்தது. அதற்குப் பின்னர் உங்களிடம் கேட்டிருக்கிறேன். *(குறுக்கீடு)* அதை காவல் துறைக்கு அனுப்பி என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ எடுக்கலாம். *(குறுக்கீடு)* பேரவைக்கு நானே தெரிவித்து விடுகிறேன். திரு. தாமரைக்கனி அவர்கள் தன்னுடைய சட்டமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்துவிட்டதாக எனக்குத் தபால் மூலம் ஒரு கடிதம் வந்தது. அந்தக் கடிதம் வந்தவுடன், திரு. தாமரைக்கனியை நேரில் அழைத்து இந்தக் கடிதம் நீங்கள் எழுதியதா என்று காண்பித்துக் கேட்டபோது, தான் எழுதவேயில்லையென்று மறுத்தார். அதன் பின்னர் அவருடைய இயற்கையான கையெழுத்தையும், இதனுடைய கையெழுத்தையும் சரிபார்க்கிறபோது, அது முழுமையாக மாறுபாடாக இருந்த காரணத்தால், யாரோ வேண்டுமென்று செய்திருக்கிறார்கள் என்று தெரிய வந்தது. அதை காவல் துறைக்கு அனுப்பி உரிய நடவடிக்கை எடுக்கச் செய்யலாம் என்பதை தாமரைக்கனிக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மற்ற பேரவைத் தலைவர்களானால் உடனடியாக பத்திரிகையைக் கூப்பிட்டு ஒருவர் இராஜினாமா செய்து விட்டார் என்று அறிவித்திருப்பார்கள். நான் விதிமுறைப்படி நடக்கிறவன் என்கிற காரணத்தாலே, தாமரைக்கனியையே கூப்பிட்டு அழைத்துப் பேசினேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

4. அறிவிப்புகள்

(அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி *9* உள்விதி *(1)*-ன் கீழ் கீழ்க்காணும் உறுப்பினர்களைப் பேரவையின் *11*-வது கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக (Panel of Chairmen) நியமிக்கிறேன்.

1. திரு. வி.பி. சந்திரசேகர்
2. டாக்டர் எஸ். சுந்தரராஜ்
3. திருமதி கே. மரியம் உல் ஆசியா
4. திரு. வி. கே. லட்சுமணன்
5. திரு. ஆர். சிங்காரம்
6. திரு. செ.கு. தமிழரசன்